## இலங்கை இறப்பர் ஆராய்ச்சி சபை – 2017

இலங்கை இறப்பர் ஆராய்ச்சி சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுக்கள் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1956 இன் 11 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தால் திருத்தப்பட்டவாறான இறப்பர் ஆராய்ச்சி கட்டளைச் சட்டத்தின் (439 ஆம் அத்தியாயம்) 8(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும், இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் தீர்மானிப்பதற்காக 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தற்றுணிவு அதிகாரத்தை வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தை தவிர்த்து இறப்பர் பயிர்ச்செய்கை சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை அரசாங்கத்துறை கணக்கீட்டு நியமம்

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02**

(i) மீளாய்வாண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்றுக்கு பெறுமானத்தேய்வு மற்றும் பணிக்கொடைக்கான ஒதுக்கீடு முறையே ரூபா 27,361,048 மற்றும் ரூபா 30,670,025 செம்மையாக்கப்பட்டிருந்தும் காசுப் பாய்ச்சல் கூற்றில் ஆண்டிற்கான பற்றாக்குறைக்கு காசு அற்ற மாற்றங்களை செம்மையாக்கும் போது பெறுமானத் தேய்விற்காக ரூபா 30,550,952 மற்றும் பணிக்கொடைக்கான ஒதுக்கீட்டிற்காக ரூபா 12,769,448 செம்மையாக்கப்பட்டிருந்தது.

(ii) சபைக்கு ஏனைய மானியங்களாகக் கிடைத்த ரூபா 21,240,306 தொகை ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்றில் ஏனைய வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தும் காசுப் பாய்ச்சல் கூற்றில் நிதிச் செயற்பாடுகளின் கீழ் காசு உட்பாய்ச்சலாக காட்டப்பட்டிருந்தது.

(iii) சமர்ப்பிக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் தொழிற்படு மூலதனத்தில் மாற்றங்களின் மொத்த தொகை ரூபா 62,343,677 ஆக இருக்க வேண்டிய போதிலும் கூட்டுதல் தவறின் அடிப்படையில் அது ரூபா 61,948,791 ஆகக் காட்டப்பட்டிருந்தது.

(iv) 2017 ஆம் ஆண்டில் நிலையான சொத்துக்களைக் கொள்வனவு செய்தல் ரூபா 63,361,895 ஆக இருந்த போதிலும், காசுப் பாய்ச்சல் கூற்றில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்தலாக ரூபா 66,551,800 பதியப்பட்டிருந்ததன் காரணமாக முதலீட்டு நடவடிக்கைகள் ரூபா 3,189,905 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் - 09**

நியமத்தின் 15 அம் பிரிவின் பிரகாரம் கிரயம், நிகர தேறக்கூடிய பெறுமதி ஆகிய இரண்டில் குறைந்த பெறுமதியில் இருப்புக்கள் கணிக்கப்பட வேண்டிய போதிலும் களஞ்சிய இருப்புக்கள் சராசரிக் கிரயத்தில் ரூபா 18,328,099 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 923,253 கூட்டு மொத்தமான காலாவதியான இருப்புக்களும் பயன்படுத்த முடியாத இருப்புக்களும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மூலதன மானியத்தை கணக்கீடு செய்வதற்குரிய சபையின் கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரகாரம் மூலதன மானியத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களை பயன்தரு அயுட்காலத்தை அடிப்படையாகக் கொண்டு ஒழுங்கு முறையான அடிப்படையின் கீழ் அரசாங்க மானிய வருமானமாக இனங்காணப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தும் முன்னைய பல ஆண்டுகளாக நானாவித செயற்திட்டங்களுக்காக திறைசேரியிடமிருந்தும் ஏனைய நிறுவனங்களிடமிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 178,764,842 மொத்த தொகையான மூலதன மானியத்திற்காக அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்னை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 69 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்கள் பயன்பாட்டிற்கு பொருத்தமான நிலைக்கு கொண்டு வரப்பட்டதன் பின்னர் பெறுமானத்தேய்வு செய்தல் ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டில் நிலையான சொத்துக்களை பெறுமானத்தேய்வு செய்யாமைக்கு கணக்கீட்டுக் கொள்கைகள் இனங்காணப்பட்டிருந்தது.

(இ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 10,504,650 தொகையான சபையின் உள்ளக வீதிகள் அபிவிருத்திக் கிரயம் நடைமுறையற்ற சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தும் அச் சொத்துக்களுக்காக பெறுமானத்தேய்வு கொள்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேயிலை மற்றும் கருவா மீள் பயிர்ச் செய்கை கணக்கின் இரண்டு மீதிகளின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட ரூபா 246,911 கூட்டு மொத்தமான பெறுமானத் தேய்வு நிதி செயலாற்றல் கூற்றிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 ஆம் ஆண்டில் உள்ளக வீதிகளைத் திருத்தம் செய்தல் மற்றும் கட்டிடங்களை நிர்மாணித்தலின் அடிப்படையில் செய்த வேலைகளின் பெறுமதியிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்ட ரூபா 654,736 மொத்த தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) ஒரு ஒப்பந்தகக்காரருக்கு கொடுப்பனவு செய்யும் போது கழிக்கப்பட்ட ரூபா 580,803 தொகையான முற்பணங்கள் உரிய பேரேட்டுக் கணக்குகளிலிருந்து கழிக்கப்பட்டிருக்காததன் காரணமாக அப்பெறுமதியால் முற்பண மீதி அதிகரித்தும் நிர்மாணக் கணக்கின் மீதி குறைந்தும் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டில் 02 நிர்மாணங்கள் தொடர்பாகச் செலுத்தப்பட்ட முற்பணம் மற்றும் முதலாவது விலைப்பட்டியல் பெறுமதியாக ரூபா 6,506,218 மொத்த தொகை பூர்த்தி செய்யப்படாத வேலைக் கணக்கிற்குப் பதிலாக கட்டிடங்கள் கணக்கிற்கு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு இறுதி மீதியாகக் காட்டப்படாத வழங்கல் முற்பணக் கணக்கின் ரூபா 63,168 மீதி மீளாய்வாண்டிற்கான ஆரம்ப மீதியாகப் பதியப்பட்டு நிதிக் கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஊ) 2017 ஆம் ஆண்டில் ''60 மில்லியன்'' என்ற செயற்திட்டத்திற்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட மானியத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 5,570,499 தொகையான நிலையான சொத்துக்களை நிலையான சொத்துக்களாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக மீளாய்வாண்டிற்கான ஒரு செலாவாகப் பதிவழிக்கப்பட்டிருந்தது.

(எ) 2017 திசெம்பர் 31 வரை ரூபா 20,565,039 கூட்டு மொத்தப் பெறுமதியான வழங்கப்படாத பொருட்கள் இருப்பு நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்களாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

**2.2.4 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 21 கடன்பட்டோர்களுக்குரிய மீதிகளின் மொத்தம் ரூபா 908,295 ஆக இருந்த போதிலும் அது தொடர்பாக அனுப்பிவைக்கப்பட்ட மீதிகளை உறுதிப்படுத்தல் கடிதங்களின் பிரகாரம் மீதிகள் பூச்சியமாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

**2.2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை**

பின்வரும் விடயங்களுக்கு எதிரே காட்டப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்கு விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|
| | | ரூபா. | |
| **(அ)** | **கடன்பட்டோர்** | | |
| | பொதுக் கடன்பட்டோர் | 2,664,769 | மீதிகளை உறுதிப்படுத்தல் கடிதம் |
| | கடன்பட்டோர் | 2,823,950 | |
| | கடன்பட்டோர் தீர்த்து வைத்தல் கணக்கு | 23,523,953 | |
| | மொத்தம் | 29,012,672 | |
| **(ஆ)** | **கடன்கொடுத்தோர்** | 20,359,279 | |

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏனைய நடைமுறைச் சொத்துக்களிலுள்ள கடன்பட்டோர் தீர்த்து வைத்தல் கணக்கின் ரூபா 23,523,954 மீதியில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்டு வரும் ரூபா 17,336,616 மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 05 ஆண்டுகளிலிருந்து 10 ஆண்டுகள் வரையான காலம் செயற்படாது காணப்பட்ட ரூபா 7,377,774 கூட்டு மொத்தமான நானாவித கடன் கொடுத்துோர் மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XV ஆம் அத்தியாயம் | கல்வி நடவடிக்கைகளுக்காக வெளிநாடு சென்று பிணைமுறி நிபந்தனைகளை மீறிய 05 உத்தியோகத்தர்களிடமிருந்து 02 ஆண்டுகளிலிருந்து 27 ஆண்டுகள் வரையான காலத்துள் சபையினால் அறவிட வேண்டிய ரூபா 6,634,929 கூட்டு மொத்தமான மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ)** | **திறைசேரி சுற்றறிக்கை** | |
| | (i) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க சுற்றறிக்கை. | நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க சுற்றறிக்கை | கணனி துணைக்கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2004 சனவரி 26 ஆந் திகதிய 2004/நூல்/01 ஆம் இலக்க தேசிய நூல் நிலைய மற்றும் ஆவணவாக்கல் சேவை சபையின் சுற்றறிக்கை. | 2017 ஆம் ஆண்டிற்காக நூல் நிலையப் புத்தகங்கள் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான சபையின் நிதி விளைவுகள் ரூபா 45,382,393 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 20,718,304 ஆக இருந்ததனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 24,664,089 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது ஏனைய செலவுகள் ரூபா 48,935,913 ஆல் அதிகரித்தல் மேற்கூறிய வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 84,950,295 தொகையான பற்றாக்குறை உச்ச நிலையுடன் மீளாய்வாண்டளவில் ரூபா 45,382,393 ஆக இருந்தது. எவ்வாறாயினும், நிதி விளைவுகளுக்கு ஊழியர் பணிக்கொடை மற்றும் நடைமுறையற்ற சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு என்வபவற்றை செம்மையாக்கியதன் பின்னர் 2013 ஆம் ஆண்டில் ரூபா 180,081,608 தொகையான சபையின் பங்களிப்பு 2015 ஆம் ஆண்டு வரை படிப்படியாக முன்னேற்றமடைந்திருந்தும் முன்னைய ஆண்டிலிருந்து பங்களிப்பு குறைவடைந்து மீளாய்வாண்டளவில் ரூபா 313,961,232 ஆக இருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

சபைக்குச் சொந்தமான நான்கு தோட்டங்களுக்கு மத்தியில் இரண்டு தோட்டங்கள் மீளாய்வாண்டின் போது நட்டம் அடைந்திருந்ததுடன் இரண்டு தோட்டங்கள் இலாபம் அடைந்திருந்தன. முன்னைய ஆண்டின் போது நான்கு தோட்டங்களிலிருந்து நட்டம் ரூபா 3,078,555 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது இலாபம் ரூபா 9,929,952 இலாபம் அதாவது 423 சதவீதத்தால் முன்னேற்றமடைந்திருந்தது. முன்னைய ஆண்டின் போது ரூபா 2,018,705 நட்டமடைந்திருந்த டேர்டன்ட் பீல்ட் தோட்டத்தின் இலாபம் மீளாய்வாண்டின் போது 659 சதவீதத்தால் முன்னேற்றமடைந்து ரூபா 11,279,962 இலாபமாக மாறியிருந்தமை ஒட்டுமொத்த இலாபம் தொடர்பில் பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 3.3 நிறுவனத்திற்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட சம்பவங்கள்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊழியர்களால் சபைக்கு எதிராகத் தொடுக்கப்பட்டுள்ள 04 வழக்குகளுக்கான சட்டக் கட்டணமாக மீளாய்வாண்டில் செலவு செய்யப்பட்டுள்ள பணம் ரூபா 1,762,624 ஆகும்.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 செயற்திறனும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வருடாந்த ஏற்றுக்கொள்ளப்பட்ட விளைச்சல் ஒரு ஹெக்டெயருக்கு 3,000 கிலோ கிராம் அளவிலான உயர்ந்த தொகுதி சபையினால் 2009 ஆம் ஆண்டு வரை அறிமுகப்படுத்தப்பட்டிருந்தும் நிகழ்கால விளைவு ஒரு ஹெக்டெயருக்கு 800 கிலோகிராம் அளவினதாகும்.

(ஆ) மீளாய்வாண்டின் போது 03 விசேட செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன் செயல்முன்னேற்றத்தை அளவீடுசெய்வதற்காக செயலாற்றல் குறிகாட்டிகள் தயாரிக்கப்பட்டிருந்தும் செயலாற்றல் மதிப்பீட்டு அறிக்கை அந்த குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆராய்ச்சிகளின் மூலம் இனங்காணப்பட்ட 2 புத்துருவாக்கல்களுக்காக ஆக்கவுரிமை அதிகாரப் பத்திரங்கள் பெற்று 3 ஆண்டுகளிலிருந்து 8 ஆண்டுகள் வரையான காலம் கடந்திருந்தும் அதனை புதிய உற்பத்திக்காக அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இறப்பர் ஆராய்ச்சி சபையினால் ரூபா 16,199,917 கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்துடனான நாரம்பெலை (அளவ்வ) மற்றும் குமாரவத்தை (மொனராகல) ஆகிய தோட்டக் காணிகளை சுவீகரிப்பதற்காக 2013 ஆம் ஆண்டின் போது அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தும் மீளாய்வாண்டு வரை சுவீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 1,074,162 தொகையான அறவிடமுடியாக் கடனுக்காக ஒதுக்கீடு செய்தல் மீதியானது திறைசேரியின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது கடன்பட்டோர் தீர்த்து வைத்தல் கணக்கிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2017 ஆம் ஆண்டின் ஒக்தோபர் 01 ஆந் திகதியிலிருந்து திசெம்பர் 31 ஆந் திகதி வரை 18 வழங்குனர்களுக்கு செலுத்தப்பட்ட ரூபா 17,465,983 முற்பணங்களில் 2018 மே 10 ஆந் திகதி வரை ரூபா 1,306,513 பெறுமதியான பொருட்கள் மற்றும் சேவைகள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன.

(உ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொருட்கள் மீளாய்வு அறிக்கையின் பிரகாரம் ரூபா 147,292 தொகையான இருப்புக் குறைவு காணப்பட்டதுடன் இருப்புக் குறைவுக்கான காரணத்தை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 நிதியத்தின் குறைந்த பயன்பாடு**

திறைசேரியின் அங்கீகாரமின்றி மருத்துவ உதவி நிதியத்தை தோற்றுவிப்பதற்காக முன்னைய ஆண்டில் அந்த நிதியத்திற்காக ஒரு சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 5,046,772 தொகை பயன்படுத்தப்படாது காணப்பட்டது.

**4.4 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 9,327,004 கிரயமான இரண்டு இயந்திரங்களை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக 02 ஆண்டுகளுக்கும் 08 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது விளைவற்றுக் காணப்பட்டன.

(ஆ) 2017 ஏப்ரல் மாதத்தின் போது ரூபா 10,960,200 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட Rubber process Analyser உபகரணமும் துணைக்கருவியும் 2018 யூன் மாதம் வரை ஸ்தாபிக்கப்படாமையின் காரணமாக விளைவற்றுக் காணப்பட்டது.

**4.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச் சட்டத்தின் 47 ஆம் பிரிவு மற்றும் 1980 இன் 46 ஆம் இலக்க நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் பிரகாரம் 2006 இலிருந்து 2011 ஒக்தோபர் வரை அந்த நிதியத்திற்கான பங்களிப்பையும் பணிக்கொடைக்கான படிகளையும் கணிப்பீடு செய்த போது வாழ்க்கைச் செலவுப் படிகளை உள்ளடக்காமையின் காரணமாக ரூபா 933,567 மிகைக் கட்டணத்தை செலுத்த வேண்டியிருந்தது.

**5. நிலைபேறான அபிவிருத்தி**

**5.1 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்ளுதல்**

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு ''நிகழ்ச்சி நிரலின்'' பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் மீளய்வாண்டிற்காக இறப்பர் ஆராய்ச்சி சபையால் தமது நோக்கெல்லையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தெளிவுபடுத்தப்பட்டிருந்தது.

## 6. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 6.1 தாமதமடைந்த செயற்திட்டங்கள்

சபையின் வேலைத்தள கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக 2016 திசெம்பர் 29 ஆந் திகதி ரூபா 17,338,090 பெறுமதிக்காக உரிய ஒப்பந்தக்காரருடன் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டிருந்ததுடன் இந்த ஒப்பந்தம் 190 நாட்களுக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2017 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரை நாட்கள் நீடிக்கப்பட்டிருந்ததும் 2018 யூலை 31 ஆந் திகதி வரையும் ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

### 6.2 தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வு பந்திகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 திசெம்பர் 10 ஆந் திகதிய 1/2010 ஆம் இலக்க வணிக, சுங்க தீர்வை மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கையின் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்த தோட்ட அதிகாரிக்கு வாகன உத்தரவுப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு தகமை இல்லாதிருந்தும் மோட்டார் வாகன உத்திரவுப் பத்திரம் 2011 நவம்பர் 29 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்ததுடன் இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனத்திற்காக சுங்க தீர்வை மற்றும் ஏனைய வரிச் சலுகைகளாக ரூபா 8,090,574 இடம் பெற்றிருந்தன் காரணமாக அந்த அளவான நட்டம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருந்தது. 2016 யூன் 14 ஆந் திகதி வணிக மற்றும் முதலீட்டுக் கொள்கை திணைக்களத்தின் ரீஎஸ்பீ/எஸ்எஸ்/01/04/08/10 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் அதற்காக பொறுப்புக் கூற வேண்டிய நபரிடமிருந்து அந்த நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பட்டதாரிகளைப் பயிற்றுவிப்பதற்காகச் செலுத்தப்பட்ட ரூபா 2,211,770 தொகை பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சிடமிருந்து மீளப் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2011 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை மீளப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுபாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரது கவனத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) கணக்கீடு | (i) | நாட்குறிப்பு பதிவுகளை முறையாகப் பேணாமை |
| | (ii) | நிலுவைக் கடன் மீதிகைள அறவீடு செய்வது செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| | (iii) | பரிசோதனைக் கட்டணங்களை அறவீடு சம்பந்தமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் தயாரிக்கப்படாமை. |
| (ஆ) நூல் நிலைய நிர்வாகம் | (i) | இரவல் வழங்கப்பட்ட புத்தகங்களை தாமதித்து ஒப்படைப்பது சம்பந்தமான தகவல்கள் ஏடுகளில் பதியப்பட்டிருக்காமை. |

| | | | |
|---|---|---|---|
| | | (ii) | நூல் நிலையப் புத்தகங்களைப் பயன்படுத்துவது சம்பந்தமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நடைமுறைகளை அமுல்ப்படுத்துவதில் குறைபாடுகள் காணப்படுதல் |
| (இ) | பதவியணியினர் நிர்வாகம் | (i) | மருத்துவப் பட்டியல்களை மீளளிப்புச் செய்யும் நடைமுறைக்காக திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமை. |
| | | (ii) | வெளிக்கள உத்தியோகத்தர்கள் வெளியே செல்வதற்கு முன்னர் தாபன / பிரிவுத் தலைவர்களின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமை. |
| | | (iii) | வெளிச் செல்லும் திவேடும் நாளாந்த குறிப்பு புத்தகமும் பேணப்படாமை. |
| (ஈ) | பதிவேட்டுப் பொருள் மற்றும் இருப்புக் கட்டுப்பாடு. | (i) | முறைப்படியாக இன்வென்டரி பதிவேடு பேணப்படாமையும் அனைத்து பொருட்களும் பதிவேடுகளில் பதியப்படாமையும். |
| | | (ii) | விசேட செயற்திட்டத்தின் கீழ் கிடைக்கின்ற பொருட்களை இனங்காண்பதற்காக பொருத்தமான நடைமுறை தயாரிக்கப்படாமை. |
| | | (iii) | சபையில் இருப்புக் குறைவை இனங்கண்டு சரிசெய்யப்படாமை. |
| | | (iv) | இரசாயனப் பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்காக பாதுகாப்பான இடம், முறைப்படியாக அடுக்கி வைத்தல், ஏடுகளில் பதிவு செய்தல் என்பவற்றிற்காக உறுதியான ஒரு நடைமுறை இல்லாமை. |
| (உ) | சொத்துக்கள் முகாமைத்துவம் | (i) | உயிரியல் விஞ்ஞான ரீதியான சொத்துக்களின் பெறுமதியை தனித்தனியாக இனங்காணக்கூடிய வகையில் துணைப் பதிவேடுகள் தயாரிக்காமையும் ஒவ்வொரு சொத்துக்களின் முதிர்ச்சியடைந்த காலம் தொடர்பான தகவல்கள் இல்லாமையும். |
| | | (ii) | சபையில் பொருள் மெய்மையாய்வினை நடாத்துவதற்காக ரீ மற்றும் ஏ 66 படிவம் பயன்படுத்தப்படாது பொருள் பதிவேட்டில் பதியப்பட்டிருந்தமை. |